22.10.2025

O.S.No. 401/2019

DW1- - முத்துப்பாண்டியன் த/பெ. பிச்சைக்கனி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 22.10.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்கத்தெரியும். எனக்கு தாவா சொத்தின் சர்வே எண். 480/29 ஆகும். அது பலபத்திரராமபுரம் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் மொத்த வீஸ்தீரணம் 23 செண்ட் ஆகும். இந்த வழக்கு 6 1/2 செண்ட் பொறுத்தது என்றால் சரிதான். எனக்கு கட்சிப்படி ஆதியில் கடற்கரை தேவருக்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான்.

2. இதனை நிருபிக்க எந்த ஆவணமும் நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கார்லேஷன் மெமோவை தாக்கல் செய்துள்ளேன். ஆனால் நான் கடற்கரை தேவரின் பட்டாவையோ மூல ஆவணத்தையோ நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். கடற்கரை தேவருக்கு ஒரே வாரிசு மகாலிங்க தேவர். அந்த கடற்கரை தேவர் எப்பொழுது இறந்தார் என்பது எனக்கு தெரியாது. மேலும், கடற்கரை தேவரின் இறப்பு சான்றிதழ் அல்லது கடற்கரை தேவரின் ஒரே வாரிசு மகாலிங்க தேவரின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. மேற்படி மகாலிங்க தேவரின் அனுபவத்தை நிருபிக்க நான் எந்த ஆவணத்தையும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மகாலிங்கதேவர் எப்பொழுது இறந்தார் என்றால் சரிதான். மேற்படி மகாலிங்கதேவரின் வாரிசு மற்றும் இறப்பு சான்றிதழையோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மகாலிங்கதேவருக்கு பிறகு அவரது

குமாரான திரவியத்தேவரின் அனுபவத்தை காட்டக்கூடிய பட்டாவையோ அல்லது இதர ஆவணங்களையோ தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். அவரின்பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

4. பி.வா.சா.ஆ.1ன் தேதி எனக்கு தெரியாது. ஆண்டு எனக்கு தெரியும். அந்த ஆவணம் 1950ம் ஆண்டு ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்து திரவியதேவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் துலங்காது. மேற்படி திரவியதேவர் எனது கட்சிப்படி எனது தகப்பனாரின் தாயாரான ஆச்சியம்மாளுக்கு கிரயம் கொடுத்தார். நான் ஆச்சியம்மாளின் அனுபவத்தை நிருபிக்க நான் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தீர்வை ரசீதை தாக்கல்செய்துள்ளேன். நான் தீர்வை ரசீதை தாக்கல் செய்யாமல் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆச்சியம்மாள் எப்போது இறந்தார் என்பதற்கான வாரிசு மற்றும் இறப்பு சான்றிதழை தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். ஆச்சியம்மாளுக்கு என் தந்தை மட்டும் தான் ஒரே வாரிசு. இதை நிருபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. எனது தந்தையின் அனுபவத்தை நிருபிக்க இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அனுபவம் எங்கள் வசம் தான் உள்ளது. எனது தந்தை 14.10.1993ம் தேதியில் இறந்தார். மேற்படி தேதி எனது முதல்விசாரணை மற்றும் எதிருரையில் கூறவில்லை என்றால் சரிதான். எனது தந்தை இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது குடும்பத்தில் தாவா சொத்து எப்பொழுது ஒதுக்கப்பட்டது என்றால் எனது அப்பா இறந்த பின்பு பேச்சுவார்தை நடைபெற்றது. அதற்கு

பின்பு சுமார் 35 ஆண்டுகளாக நான் அனுபவம் செய்து வருகிறேன்.

6. எனது பெயரில் தாவா சொத்திற்கான பட்டா ஏதும் இல்லை என்றால் சரிதான். எனது 35 ஆண்டுகால அனுபவத்தை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. எனது கட்சிப்படி தபசில் சொத்தின் சர்வே எண்.480/29 ஏ,பி,சி,டி என நான்காக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் எனது முதல்விசாரணையிலும், எதிருரையிலும் மேற்படி புல எண்ணாணது பி, மற்றும் டி ஆக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேலும் மேற்படி உட்பிரிவுக்கான பட்டாவை பார்த்துள்ளேன்.

8. புல எண்.480/29 ஏ மாரிமுத்து தேவர் மகன் சண்முக தேவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது தற்போது தான் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தின் விஸ்தீரணம் 1 ஏர்.

9.புல எண்.480/29 பி சண்முக தேவர் மகன் பெருமாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது வழக்கிற்கு பின்பு தான் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தின் விஸ்தீரணம் 2 ஏர்.

10. புல எண்.480/29 சி சங்கரபாண்டி தேவர் மகன் ஆதிமூல தேவர், மற்றும் ஆதிமூலதேவர் மகன் சமுத்திரகனி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது தற்போது தான் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தின் விஸ்தீரணம் 2 ஏர்.

11. புல எண்.480/29 டி1, 2 வாதிகளின் தகப்பனார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அது தற்போது தான் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தின் விஸ்தீரணம் 5 ஏர்.

12. மேற்படி நான்கு உட்பிரிவுகளிலும் உட்பிரிவுகளின் பட்டாக்களின் என் குடும்பத்தை சார்ந்த நபர்களின் பெயரில் இல்லை என்றால் சரிதான்.

13. வழக்கின் தபசில் சொத்து புல எண்.480/29 டி ஆதியிலிருந்தே 1,2 வாதிகளின் தந்தை பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 1996 ம் ஆண்டிற்கு பின்பு தான் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பட்டா மாற்றம்செய்தது தொடர்பாக நான் எந்த மாற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஊர் பெரியவர்களிடமும், திருநெல்வேலி மாவட்ட குற்றப்பிரிவில் புகார் அளித்தேன். மேற்படி புகார் மனுவில் நான் வாதிகளின் வசம் தான் அனுபவம் உள்ளது என்று புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. தவறுதலாக பட்டா மாற்றம் செய்ததால் தான் புகார் அளித்தேன். அனுபவம் எங்கள் வசம் தான் உள்ளது. மேற்படி புகார் மனு தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்படி புகார் மனு எனக்கு பாதமாக இருக்கும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

14. புல எண்.480/29 டில் 1 ம்வாதி அரவிந்த் என்பவருக்கு 03.10.2018 ம் தேதியில் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது மோசடியானது. இது தொடர்பாக தான் மேற்படி புகார் அளித்தேன். புல எண்.480/29 டில் உள்ள அனைத்து சொத்தும் வாதியின் வசம் இருந்து வருவதால் தான் அவர் மேற்படி கிரயத்தை கொடுத்தார் என்றால் சரியல்ல.

15. தபசில் சொத்து வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து, அவர் ஏற்பாடு ஆவணம் மூலம் 1, 2 வாதிகளுக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தபசில் சொத்து வாதியின் வசம் இருந்துள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நானோ எனது முன்னோர்களோ அனுபவம்செய்து வந்தோம் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கை செலவுத்தொகையுடன் அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.